## பகுதி II

06. "இலக்கிய வளர்ச்சிக்கு, திறனாய்வு மிகுந்த பங்களிப்பினைச் செலுத்துகின்றது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

07. நாவல் பற்றிய மதிப்பீட்டில் கருத்திற் கொள்ளவேண்டிய திறனாய்வு அம்சங்களைத் தெளிவுறுத்துக.

08. உணர்ச்சிக் கொள்கைக்கும், அழகியற் கொள்கைக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளைத் தெளிவுறுத்துக.

09. மகாகவி பாரதிக்குப் பின் தமிழ்க் கவிதை வளர்ச்சியின் முக்கிய போக்குகளை இனங்காட்டி விளக்குக.

10. பின்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

**இன்று நான் பெரிய பெண்**

நான்
கல்லாய் மாறிய பூ
பாறையாய் இறுகிய காற்று
பனியாய் உறைந்த நீர்

பூவைப் போலவும்
காற்றைப் போலவும்

நீரைப் போலவும்
குதித்துத் திரிந்து
சுற்றிய பருவத்தில்

காலை உதைத்து
வீரிட்டு அழவும்
கலகல என்று
கைதட்டிச் சிரிக்கவும்
கோபம் வந்தால்
கொப்பியைக் கிழிக்கவும்
முடிந்த காலம்

TG III

மரத்தில் ஏறவும்
மாங்காய் பிடுங்கவும்
பக்கத்து வீட்டுப்
பிள்ளை களுடனே
கிட்டி அடிக்கவும்
ஒளித்துப் பிடிக்கவும்
ஒன்றும் பேசிலர் எவரும்

இன்று
நான் பெரிய பெண்
உரத்துச் சிரித்தல் கூடாது
விரித்த புகையிலை
அடக்கம், பொறுமை,
நாணம்
பெண்மையின் அணிகலம்
கதைத்தல், சிரித்தல்,
பார்த்தல், நடத்தல்
உடுத்தல்
எல்லாம் இன்னபடி என்றெழுதி ..........
நான்
கல்லாய்
பாறையாய்
பெண்ணாய்...

UNIVERSITY OF PERADENIYA

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - පැරණි නිර්දේශය) පරීක්ෂණය - 2021 (දෙසැම්බර් - 2022)

பொதுக்கலைத் தேர்வு (வெளிவாரி – பழைய பாடத்திட்டம்) – 2021 (டிசம்பர் - 2022)

Bachelor of Arts (External - Old Syllabus) Examination – 2021 (December – 2022)

## TAMIL - III / தமிழ் - III

## TG III - சோழர்காலம் முதல் நவீனகாலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறும் இலக்கியக் கோட்பாடுகளும்

කාලය පැය(03) තුනයි.
மூன்று(03) மணித்தியாலங்கள்
Time three (03) Hours.

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரு வி க்களைத் தெரிவு செய்து எல்லாமாக 05 வினாக்களுக்கு விடையளிக்க.
Answer 05 _____ questions only.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව--10-------- කි.

இந்த வினாப்பத்திரத்தில் ----10--- வினாக்கள் உள்ளன.
There are ---10--- questions in the question paper.

---

### பகுதி I

01. தமிழ்ச் சிற்றிலக்கிய வரலாற்றில் சோழர் காலச் சிற்றிலக்கியங்கள் பெறும் முக்கியத்துவம் பற்றி மதிப்பிடுக.

02. "தமிழில் பொதுமக்கள் சார்பு இலக்கியங்களின் தோற்றத்துக்கு விஜயநகர - நாயக்கர் காலம் வழியமைத்துக் கொடுத்தது" கருத்துரை வழங்குக.

03. தமிழில் இலக்கிய வரலாற்றில் ஐரோப்பியர் காலம் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

04. தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் மணிக்கொடிக் குழுவினரின் பங்களிப்புப் பற்றி கருத்துரை வழங்குக.

05. பின்வருவோரில் யாரேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

அ) சயங்கொண்டார்
ஆ) மாதவையா
இ) திரிகூடராசப்பக்காவிராயர்
ஈ) திருத்தக்கதேவர்